கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3, தாராபுரம்
மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்

MCOP No. 46/2022 23.01.2025 ம.சா.1

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | கௌசல்யா | தொழில் |
| க/பெ | கலையரசன் | கிராமம் |
| வயது | | தாலுகா |
| ஜாதி | | மாவட்டம் |
| சமயம் | | |

முதல் விசாரணை

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் மனுதாரர். பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும், அவற்றை தெரிந்து கொண்டு தான் நான் அதில் என் கையொப்பங்களை போட்டுள்ளேன். தராபுரம் காவல் நிலைய குற்ற எண். 71/2021 முதல் தகவல் அறிக்கை யின் உண்மை நகல் ம.சா.ஆ.1, பார்வை மகஜர் உண்மை நகல் ம.சா.ஆ.2, மாதிரி வரைபடம் உண்மை நகல் ம.சா.ஆ–3, சடலகூறாய்வு அறிக்கை உண்மைநகல் ம.சா.ஆ.4, TN 78 D 8123 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை உண்மை நகல் ம.சா.ஆ.5, குற்ற இறுதியறிக்கை உண்மைநகல் ம.சா.ஆ.6, கலையரசன் என்பவரது இறப்பு சான்று உண்மை நகல் ம.சா.ஆ.7, கலையரசன் என்பவரது வாரிசு சான்று வா.சா.ஆ.8, மனுதாரர்களின் ஆதார்அடையாள அட்டை புகைப்பட நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது ம.சா.ஆ.9 (4 வரிசை), மனுதாரர்களின் வங்கி கணக்கு புத்தகம் ம.சா.ஆ.10 (4 வரிசை), மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் கண்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என்னுடைய கணவர்தான் தவறான வழியில் வந்து ஆட்டோவின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரி அல்ல. விபத்து என்னுடைய கணவரின் கவனக்குறைவால் நடந்ததாகத் தான் போலீசார் இறுதியறிக்கை தாக்கல் செய்து வழக்கு அற்றுப்போனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த முதல்

தகவல் அறிக்கை, குற்றஇறுதியறிக்கை எனது  கணவருக்கு எதிராக உள்ளது என்று சொன்னால் சரியல்ல.  மேற்படி குற்ற இறுதிஅறிக்கைக்கு  எதிராக நான் ஏதேனும் சட்ட நடவடிக்கைகள் எடுத்துள்ளேன் என்றால் இல்லை. என்னுடைய கணவர் கவனக்குறைவாக வாகனத்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தியதால் தான் நான் எந்த விதமான சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.  என்னுடைய கணவர் ஓட்டிச் சென்ற வாகனத்திற்கு பதிவு சான்று, காப்பீட்டுச் சான்று மற்றும் ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதற்காக அபராதம் செலுத்தி உள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.  அதனால்தான் என்னுடைய கணவர் ஒட்டிச் சென்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்விற்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தற்சமயம்  மேற்படி ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளோம்.  அவ்வாறு எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியில்லை.  என்னுடைய கணவர் விவசாயத்தின் மூலம் மாதம் ரூபாய் 30,000/- சம்பாதித்தார் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.  இம்மனு இரண்டாவது எதிர்மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.01.23 19:51:11 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.